மரு...

சென்னகேசுவரஸ்வாமி மகாத்மியம்,

1 & 2-வது பாகங்கள்

இதை இயற்றியவர்

...ப்பட்டி பஞ்சாயத்து ஸ்கூல்

...கட்ராமனையங்கார் குமாரர்

...னிவாசையங்கார்

1931.

சஞ்சீவி பிரஸ், தர்மபுரி.

Q23:38.2116 MD
N31.1,2
120267

மருதிப்பட்டி
சென்னகேசுவரஸ்வாமி மகாத்மியம்.

விருத்தம்.

மானிலத்தோர் மதிக்க மகிமைப் பொருந்தி வாழும்
மருதிநகர் வாசனென்று
மானிடர்கள் மலரடியை போற்றி செய்ய
மகிமையும்காட்டி மயங்கவைத்தாய்
மதியாத மானிடரை மதமடக்கிவைத்தாய்
சீரான சிங்கவாகனுமு மைந்த சென்னகேஸ்வரஸ்வாமியை
சென்னிமேல் கரங்குவித்து ஸ்ரீனிவாசன் சேவித்துநின்றேனை

(வசனம்)—ஸ்ரீமத் அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயக ராகியும் ஆதிமத்யாந்த ரகிதராகியும் கலியுகத்தில் கர்மவினையால் கருக்குழியில் ஜனிக்கும் மானிடரை ரக்ஷிக்கவேண்டி மருதிப் பட்டி நகரில் எழுந்தருளியிருக்கும் சென்னகேஸ்வரஸ்வாமியை சன்னிமேல் கரங்குவித்து அஞ்சலி செய்யின் சகல பாபங்களும் பாகும். வலிய ஆணவமல சேஷடையுமொழியும். இம்மையில் ரய்வயிற்றில் கருத்தரித்து பிறந்ததற்கு காரணமாய் நின்ற ரார்த்துவவினைகளும் போகும்.

பாட்டு

1 சென்னை ராஜதானியில் சேலம் ஜில்லா எல்லைக்குள்
அரிஊரு தாலூகாவில் அதர்க்கடுத்த மருதிநகர்
மருதிபட்டி நகரிலே மாயமாகி நின்றவா
சென்னகேசவஸ்வாமியே சரணம் செய்தேன் வானுமே
சென்ற ஆடி திங்களில் பதினெட்டாந் தேதியில்
சாமி சென்னகேசவர் தென்பெண்ணை நதி சென்றுமே
தீர்த்தவாரி செய்துமே நேமமாக அந்தணர் நிமிஷ
பூஜை செய்துமே.

கர்பூர தீபம் காட்டியே கண்களிக்க ஜனங்களை
உடுப்பஞ்சானை மண்டபம் உல்லாசமாக வந்துமே.

2 இளைப்பாரி ஜனங்கள் இருந்தார்கள் மண்டபம்
தாளமேள வாத்தியங்கள் சதிராக நடக்கவே
சன்னிதிக்கு வருகிறார் சாமி சென்னகேசவர்
ஆலங்கள் எடுக்குறார் அக்ஷதைகள் போடுறார்
கும்பார்த்திகள் எடுக்குறார் கோவிந்தாவென்று சொல்கிறார்
பந்தலில் இரக்கினார் பகவானை அன்புடன்
கைதட்டி கொட்டினார் கண்குளிர பார்க்கிறா
இரண்டு அந்தணர்களும் சாமிதூக்கி உள் சென்றார்.

3 சென்னகிருஷ்ணநாயுடு லாந்தர்கம்பம் வைத்தான் காண்
பாலன் ஸ்ரீனிவாசன் பகருமொழிகேளுமே.

கும்மிப்பாட்டு.

கும்மியடிப்பெண்கள் கும்மியடிப்பெண்கள்,
குல தெய்வத்தைதொழுது கும்மியடி

நம்மை ஆளும சென்னகேஸ்வரஸ்வாமியை
நாடிக்கும்மி அடியுங்கடி

மருதிநகரில் மாயன்னமைந்தா
மகிமையையான் என்னசொல்வேன்

வேதமோதுகின்ற வேதியரவர்கள்
வேளை தப்பாமல் பூஜை செய்ய

ஆலாத்திகள் எடுத்து அய்யங்காரவர்கள்
அனைவருக்கும் காட்டிவர

அனந்தம் ஜனங்களும் அடிவணங்கி தொழும்
ஆனந்த பரவசம் பாருங்கடி.

மேளமும் தாளமும் மேதுக்கடியிந்த
மேதினியிலுள்ள சன்னதிக்கு

170767

சத்தம் பெருகிய கண்டாமணி ஓசை
காதுக்கு ஏர்வையாம் கேளுங்கடி
ஊருக்கு ஒரு கிணராம் அது
வுகந்த ஜனங்களு மதில் பானம் பண்ண
பக்தியாய் அந்தணர் பகவானை தொழுது
பாதம் பணிகுரார் பாருங்கடி
ஆதியிலே யிது ஒரு ஊராமது
உகந்த ஜனங்கள் வணங்கிநிற்க
அய்ந்து ஊரான அதிசயம் கேளுங்கள்
அன்புக்குரியான அன்பர்களே
கல்லடிப்பட்டியாம் சனமான கூச்சனூர்
புதூருக்கடுத்த மேட்டூராம்
மேட்டூரைச்சேர்ந்த மருதிநகருக்கு
மகிமை வந்த விதம் பாருங்கடி
மாலைக்கட்டிகள் மூன்று பேராமவர்
முறை முறையாக புஷ்பம் கொண்டுவர
அதை வாங்கிய அந்தணர் அர்ச்சனை செய்யும்
அதிசயம் கேளுங்கள் மானிடரே

பேக்குதிரை என்று அந்தர் சன்னதியில்
பேரானபேரின்பம்தர்னடைய

பேக்குதிரைபேரில் பெருமாளை வைத்து
பெருமையாய் ஜனங்களும் பார்க்குரார்பார்

கண்டிதமாகவே காட்டுக்குபோகுமாம்
கண்டஜனங்களும் நடுங்கிநிர்க்க

நாலுநாளானாலும் நலமானக்குதிரை
நகரம்வந்து சேர்வதில்லை

காடுமேடுகளிலும் கண்டவிடமெல்லாம்
காட்டேரி காத்தானை ஓட்டிவிட்டு

பட்டிகள் சுத்தி பத்திரப்படுத்தி
பதனமாய்வந்து சேருமாம்

குதிரை பெருமையை குவலயத்திலுள்ள
மானிடர்கேட்டால்

பெருமாள் பெருமையை பேரெடுத்து சொல்ல
பேருலகோராலாகாது

வெங்கலத்தால் செய்த வேகப்புரவியாம்
வேளைஜனங்களும் கேட்டுவந்து

கில்குதிரையைபார்த்து ஜனங்களும்
கண்டுகளிக்குரார் மானிடரே

சந்திரபட்டியில் செல்லகவுண்டரும்
சேர்ந்த ஜனங்களை சேர்த்துகொண்டு

விந்தையாய் செய்த வெங்கலக்குதிரை
வேடிக்கை சொல்கிறேன் கேளுங்கடி

பெங்களூர் சிட்டியில் சில்ப்பியால்
செய்த சித்திரமேகக்குதிரையை

பக்தியாய் மானிடர் கண்டு பரவசம்
பரமானந்தமடைகுரார் பாருங்கடி

இந்தக்கும்மியை இங்கிதமாகவே
இன்னிலத்தில் வாழும் ஸ்ரீனிவாசன்

பக்தியாய் பகவானை தொழுது பண்புடன்
பாடினான் கேளுங்கடி.

இரண்டாம் பாகம்.

வெண்பா.

மாது துரோபதைக்கு மாளாதுயிலளித்து
மானபங்கத்தைக் கார்த்த மருதிநகர் மாயா நேயா
அனைவோரும் அடிவணங்கிப்போற்ற
ஆவிமரத்து ஆலயத்தில் அமர்ந்திருக்கும் ஆபத்நிவாந்தகா
மருதிநகரில் வாழும் மைந்தர்களைக்கார்க்கும்
மாரீசனை வென்ற மாயா நேயா
மருதிநகர் மாயனென்று மகிமையும் பெற்றாய்
மதியாதபேரை மதமடக்கிவைத்த மகாநுபாவா
ஆணுவத்தினால் அகந்தைகொண்டபேரை
அருநரகில் சேர்த்த சேதுமாதவா சென்னகேஸ்வரா
சிரியோனான ஸ்ரீனிவாசனைக் காக்கவேணும்.

ஸ்தோத்திரம்.

தீநதயாளா தீநரக்ஷகா
பாண்டுரங்கா பாண்டவர்சகாய
ப்ருந்தாவநலோலா பக்தவச்சலா
கேசவா அரிமாதவா

மதுசூதனா த்ரிவிக்ரமா
வாமனாவதார ஸ்ரீதரா ஸ்ரீதராயா
வ்ருஷீகேசா வுலகத்தோரைக்கார்க்கும்
காருண்யக்கடவுளே பத்பநாபா
பக்த்தவச்சலா தாமோதரா
தாரணியிலுதித்த தசரதபுத்ரா
ஜெயஜெவிட்டலா ஜெகதீரமணா
சென்னகேசவா சென்னிமேல் கரங்கூப்பி நிற்கும்
ஸ்ரீனிவாசனைக் காக்கவாவா.

முடுக்கு.

வருக வருக வசுதேவகி புத்ரா வருக வருக
தானென்ற இரணியனைகொல்ல நரசிம்மவதாரம் கொண்ட
நரசிம்மா வருக வருக
மாபலி சக்ரவர்த்தி மதத்தைவென்ற
வாமனாவதாரா வருக வருக
வலக்கையில் சக்ரமும் இடக்கையில் சங்கும் கொண்ட
கொண்டல்மணிவண்ணா வருக வருக
ஸ்ரீதேவி பூதேவி சமேதா
சென்னகேஸ்வரா வருக வருக
சிரியோனான ஸ்ரீனிவாசனை காத்தருள வருக வருக.

விருத்தம்.

சென்னை ராஜதானியைச் சேர்ந்த சேலம் ஜில்லா
அரியூரு தாலூக்கா அதர்க்கடுத்த மருதிநகர்
மருதிநகரில் மகிமையும் காட்டி மைந்தர்களை
மாராமல் கார்க்கும் கடவுளான கலியுகத்தில்
கண்டவர்கள் தெண்டம செய்ய தசரதபுத்ராராய்
சென்னகேஸ்வரஸ்வாமியை சிரியோநான
ஸ்ரீனிவாசன் சாஷ்டாங்க நமஸ்கரித்து
இச்சரிதை சாற்றிநேனே.

(வசனம்) 1930-ம் வருடம் மே-மீ 5-உயில் மகா-ா-ஸ்ரீ தர்ம புரி சஞ்சீவிப்ரஸ் அச்சுக்கூடத்தில் ஷை ஸ்வாமியின் அருளை முன்னிட்டு முதல்பாகம் பாடி நிரைவேரியது. இப்போது இரண்டாம்பாகம் பாடியதற்து ஷை ஸ்வாமியின் அருளை முன்னிட்டு சொல்லும் பாடலுக்கு சொற்குற்றம் எழுத்துப்பிழை இருந்தாலும் தெரிந்த பெரியோர்கள் மன்னித்து மருதிப்பட்டி நகரில் எழுந்தருளி இருக்கும் மாயன் வெண்பா, ஸ்தோத்திரம், விருத்தம், வசனம், பாட்டு. இவைகளை மாநிலத்திலுதித்த மனிதராய்ப் பிறந்தவர்கள் பிரமையுடன் பாடினால் அந்தகனென்ற சொல்லப் படானென்ற இயமனும் அஞ்சுவான். மருதிநகர் மாயன் மகிமை

யை அரூர் தாலூக்காவைச்சேர்ந்த கொங்கு வேளாள வகுப்பி னர்க்கு தெரியும். என்னால் சொல்ல அவ்வளவு சக்திவுடையவனு மல்ல, தெரிந்தவனுமல்ல. ஆனல் ஷீடி ஸ்வாமியின் அருளே என க்கு காட்டினமட்டில் இங்கே எடுத்துச்சொல்லுகிறேன். இதை கேழ்க்கும் பெரியோரும் சிரியோரும் வேருகவனமின்றி இதில் எழுதி இருக்கும் மருதிநகர் மாயன் மகிமையைத் தெரிந்து தாங் களும் ஷீடி ஸ்வாமிக்கு ஒரு பக்தர்களாகுவீரென்று நம்பு கிறேன். நான் பிறந்தது மருதிநகராய் இருந்தாலும் நான் (13) பதிமூன்று வயதில் வடார்க்காடு ஜில்லா திருவண்ணமாலை தாலூ க்கா நீப்பத்துரை சென்னியப்மாள் வெங்கட்ரமணஸ்வாமியின் ஆலயத்தில் அர்ச்சகராய் இருந்து விவாகமுடிந்த சதிபதிகளாய் ஷீடி ஆலயத்தை அகன்று ஊத்தங்கரை தாலூகா கூடலூர் சர்க்கார் ஆலய அழகர்ப் பெருமாள் கோவில் அர்ச்சகராய் இருந் தேன். இதுவரையில் என் குலதெய்வமாகிய மருதிநகர் மாயனை நினைத்தவனுமல்ல அதர்க்குமேல் எனக்கு பெண் குழந்தை ஜன னமாகி ஏழாம்நாள் எமலோகமடைந்த ஒருவருஷத்திற்குள் ஆண் குழந்தை ஜனனமாகியது. அப்பவும் மேற்சொல்லிய வண்ணம் நடவாததால் ஷீடி மகவு மாயன் மலரடி அடைந்தது. தவிர என் மனைவியும் மருதிநகர் மாயன் மலரடியடைந்த பின்னே நான் தனியாய் மருதிநகர் சேர்ந்து 1929ம்-வருஷம் ஷீடி பூரில் உபாத்தி

யாயராக ஒரு வருஷம் இருந்ததில் 1930-௵ மே-௴ 5-௳ யில் பாடிய பாடலுக்காக ௸ ஸ்வாமியின் அருள் பெற்று 10—9—31 ௸ கோவில் தற்கால மானேஜர் கல்லாவி கிருஷ்ணசாமி அய்யங்காரிடம் கிரயம் ரூ. 50—0—0 குத்தகைக்கு வாங்கி ௸ ஸ்வாமி இடத்தில் இப்போது அர்ச்சகராய் இருக்கிறேன். இப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த மருதிநகர் மாயன் பாடலை பக்தி சிரத்தையுடன் கேழ்க்கவேணுமாயும் பாடவேணுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டு.

மருதிநகர்மாயா மைந்தர்களைக் காக்கும் நேயா
நேமமுடனுனைப்பணிந்தேன் நிர்யலா நேயா
கார்க்கக்கடனுனக்கு கடைக்கண்ணால் பாரும் கர்த்தா
கலியுகத்தில் கடவுளென்ற கனபெயரெடுத்தாய்
மைந்தர்களும்மதிக்க மகிமையும் காட்டிநீர்
மதியாத மானிடரை மதம்மடக்கி வைத்தாய்
வையகத்திலுனைவிட வேறு தெய்வம் முண்டோ
தெய்வீகமாகி தேவரென்று பேரெடுததாய்
தேவேந்திராதி தேவர்க்கும் தேவனானீர் (திரும)

சேஷவதார சென்னகேஸ்வரா சிரியோனை
ஸ்ரீனிவாசனைக் காக்க வா வா
பன்னகசயனை பாண்டவர் சகாயனை
பக்தர்களைக் காக்கும் பத்பநாபா வா வா
மருதிநகர் மாயனென்று மகிமையும் பெற்றவா (மருதி)
உன்மகிமை அறிந்தபேர் உலகத்திலுமுண்டோ
உன்மகிமை அறியாத அசுரரையடக்கிவைத்தாய்
அனைவோரும் கொண்டாட அருள்பெற்று விளங்கி நின்றாய்
நிமலாக் கண்ணா கடைக்கண் பாருமே
பாருமே பாருமே ப்ரந்தாவனலோலா (மருதி)

வேறு பாட்டு.

மரவா திரு மனமே மருதிநகர் மாயனை மரவா திரு
மருதிநகர் மாயனை மனதினில் தானினைந்தால்
மாவிவந்தனுகானே மரவா திரு மனமே
மாயாப்ரபஞ்ச மயக்கத்தை மறந்து
மருதிநகர் மாயன் மலரடியடைவதெப்போ
மைந்தர்களைக் காத்துமவர் மகிமையும் பெற்றவர்
மகிதலம் போற்றவே மைந்தநான் ஸ்ரீனிவாசன்
மலரடி தெண்டம் செய்தேன். (மரவா)

ஊழ்வினையைப் போக்குவார்
உண்மையுடனமர்ந்தவர்
தீராவினை தீர்த்தவர் திருமுடி தரித்தவர்
திரிபுரமெரிக்காமல் திருமபிவந்தவர்
அரனுக்கு அப்புமானார் அசுரர்களை வென்றவரானார்
மறவாதிருமனமே மருதிநகர் மாயனை
மாரனுக்கு மாதஃபா னான் மறையோர்க்கு முன்னேவானார்
வாமன ரூபமாகி வரமதைக் கவர்ந்தவர்
காலனை வென்றவர் கார்த்திகேயனுக் குகந்தவர்
மைந்தர்களைக் கார்க்கவேண்டி மருதிநகரமர்ந்தவர்
மறவாதிருமனமே மருதிநகர் மாயனை
ஆதியிலே அவர் அமர்ந்தவிதம் சொல்லுகிறேன்
புத்து உருவமாகி புத்திரர் வர்து தொழ
பக்தியுமிகுந்ததாலே ப்ரந்தாவனமாகி நின்றார்
கோயில்களுமாச்சுது குளங்களுமாச்சுது
குடிகளும் வந்து தொழ கோயிலெனு பேருமாச்சுது
உச்சவங்களாகுதர்க்கு ஒரு ஜதை உச்சவமூர்த்தி
உடனே உண்டாக்கி வைத்தார் உகந்ததோர் ஜனங்களும் (மா)

உர்சவங்க ளாகுமுறை உரைக்கின்றேன் கேளுங்கள்
சித்திரை மாதத்தினில் ஸ்ரீராமநவமியாம்
சீரான ஆடி திங்கள் தினகரன் தீர்த்தவாரி
தென்பெண்ணை நதியில் தீர்த்தவாரி உச்சவமாம்
அதர்க்கடுத்ததொரு ஆவணி திங்களில்
ரோகணி நக்ஷத்திரத்தில் கிருஷ்ணஜனன வுச்சவமாம்
கன்னியாமாதத்திநில் கலியுகத்தோர் கொண்டாட
நரஜென்மமாய் வுதித்தபேர்க்கு நவராத்திரி கொண்டாட்டம்
தசராநாளில் தசரதன் தநயனுக்கு பத்தாநாளில்
பத்தவதாரங்கொண்ட பன்னகசயநனுக்கு
பக்தர்கள் கிழக்கு பாரிசத்தில் உச்சவஙகள் நடத்துரார்பார்
மார்கழிமாதத்தில் ஏகாதசி உச்சவத்தை எடுத்து நடத்துரார்பார்
மகரத்தின மாதத்தில் மத்யான காலமதில்
மாயன் கோவிலுக்கு நேர்க்த மங்கையுட வீதியிலே
எல்லா ஊர்களும் சேர்ந்து எருதுகட்டு உச்சவத்தை
ஏகியே செய்கின்றார் இந்ததொரு உச்சவத்தை
இன்னிலத்தில் வாழுகின்ற சிரியோநான ஸ்ரீனிவாசன்
இச்சரிதை சாற்றுநேனே மரவாதிரு மநமே மருதிநகர்.

வேறு பாட்டு.

சேவியுங்கள் சென்னகேஸ்வரஸ்வாமியை
சேவைசெய்யுங்கள் சென்னகேஸ்வரஸ்வாமியை
மரவாமல் மலரடி மதித்து துதிப்போமானால்
மரலிவாதைக்குள் ளகப்பட மாட்டோமே
மரணகாலமதில் மாயனை நினைத்தாலே
மரலியவன் மயங்கி மதித்து தூரவே நிற்பான்
சேவியுங்கள் சென்னகேஸ்வரஸ்வாமியை
சென்னிமேல் கரங்கூப்பி கடவுளை நினைத்தாலே
காலன் வாதைக்குள் ளகப்படமாட்டோமே
கருணாநிதியவரை கழலடிப்போற்றினால்
காலபாசத்தார் கட்டுபடமாட்டோமே
கலியுகத்தினில் கடவுள் அவதாரமாகி
அசுரரை அதமாக்கி அன்பரைக் கார்த்தவர்
ஆண்டவனை தினமும் அடிவணங்கி தொழுதாலே
ஆயன் கிருபைவைத்து அன்பரைக் கார்த்திடுவார்
மருதிநகரில் மகிமைப் பொருந்தி வாழும்
மாயன் சென்னகேஸ்வரா மைந்தநான் ஸ்ரீனிவாஸன்
சென்னிமேல் கரங்கூப்பி சேவித்து நின்றேனே.

கும்மிப்பாட்டு.

கும்மியடிப்பெண்கள் கும்மியடிப்பெண்கள்
குவலயம்போற்றவே கும்மியடி
நம்மையாளும் சென்ன கேஸ்வரஸ்வாமியை
துதித்துக்கும்மி யடியுங்கடி
மருநிககரினில் மாரியம்மன் கோவில்
மாயன் கோவிலுக்கு மேற்குபுரம்
அதற்கு பக்கமதில் சத்திக்கணபதியை
சார்ந்துக்கும்மியடியுங்கடி
மாயன்கோவிலுக்கு மேர்க்குபுரமதில்
வேப்பமரத்தடியினிலே நிலையாக வாழ்கின்ற
நீலியை நினைத்துச் சார்ந்துக் கும்மியடியுங்கடி
அதற்குப்பக்கமதில் சத்திக்கணபதி
சரியான நேர்க்கிழக்கு வேப்பமரம்
மரத்திர்க்கு மத்தியில் மாயன் மகிமையை
மகிழ்ந்து சொல்லுகிறேன் கேளுங்கடி

மறையோர்கள் வீதியும் மத்யான காலத்தில்
மந்திரஜெபபூஜை மகிமையை
மாயனுக்கு அற்புதமென்று அடிவணங்கி
கும்மி அடியுங்கடி
மைந்தனும் மாயனை மனதில் நினைந்துமே
நிலையானக்கும்மியைப் பாடுதற்கு
வாணியை நினைத்து வருந்துங்கும்மியை
வர்ணித்து சொல்கிறேன் கேளுங்கடி
வாணி கலைவாணி வாவா எந்தன்மனதில்
மறையோன்மைந்தன் மனதுருகிறேன்
மகிழ்ந்து நீத்துணையிருந்தாலே
மதித்துக்கும்மியை செப்புகிறேன்
ப்ரந்தாவனலோலனடி பாப்ரம்மசொரூபமடி
பரப்ரம்மத்தைக்கண்டுமே நீங்கள் பரந்துகும்மியடி
யுங்கடி

இந்தக் கும்மியைச் செப்புகிறேன் சென்னகேசவர்க்கு
அற்புதமாய்.

ஆயாநேயா அனைவோர்க்கும் நேயா
அடிவணங்கி சொல்லும கும்மிதன்னை

குற்றமிருந்தாலும் குறைகளிருந்தாலும்
தெரிந்தபெரியோர்கள் மன்னிக்கவும்
சொற்குற்றம் சொற்பிழை சொன்னதவருதல்
இத்தனையும் பொருத்து நீங்கள் இந்த கும்மியை கேழ்க்கவேணும்
முதற்பாகம் கும்மியல்லா இது
இரண்டாம்பாகம் கும்மி இது
ஆகமமுணர்ந்த பெரியோர்களே
அடிவணங்கிப் போற்றி சொல்லுகிறேன்
மருதின்நகரின் மாயன் மகிர்ச்சுவர்கள்
மகிமையான திருப்பணிகள்
தினம் தினம் செய்யும் தினகரன்வேலைகள்
வேண்டியஜனங்களும் கேழ்க்கவேணும்
வெங்கிடசமுத்திரம் லே. வி. எம். வேங்கியாக்கவுண்டரும்
வேணத்திருப்பணி வேடிக்கையாக செய்குறா
வேதமுணர்ந்த வேதியர்கள் வந்து வேடிக்கைப்பார்க்குறார்
பாருங்கடி

அய்ந்துஊரார் அதிகாரம் பெற்று
அன்னவர்செய்த திருப்பணிகள் — தினகரனுக்கு
திருபதி என்றே திருப்பி கும்மியடியுங்கடி

திருபதிக்கு பாதி கோவிலாம்

பார்த்தஜனங்களும் சொல்லுவாராம்

கோவிலைச்சுற்றி நந்தியாவட்டம்

நந்தவனங்களைப் பாருங்கடி

மந்தாரைமரத்தில் மலர்களெடுத்து

மாலைகட்டிகள் மாலைகட்டுகிறார்

மாலையைச்சூட்டி மறையோர்க்கையில் கொடுக்கும்

மகிமையைப்பாருங்கள் மைந்தர்களே

கோவிலுக்குள்ளே சேர்ந்துகிணறாம்

இன்னும்குறடு கட்டவில்லை

கிணற்றுக்குள் தண்ணீர் தங்கிநிற்பதை

நினைத்துகும்மியடியுங்கடி

கிணற்றுக்கு குறடு தைமாதத்தினில் தயவாக ஜனங்களும் கட்டுவார்கள்

கட்டினபின்பு கடவுளுக்கு தீர்த்தம் எடுக்குவாராம் பாருங்கடி

நான் பாடினக்கும்மியது நாடுசெழிக்கவேணுமென்று

நாராயணன் நமக்குத்துணையிருப்பாரென்று நம்பிகும்மியடியுங்கடி

ஷை பாடலுக்கு தர்மம் செய்தவர்களின் பெயர்.

மருதிப்பட்டி கி. மு. கிருஷ்ணசாமி அய்யங்கார்...	0	4	0
ஷையூர் கர்னம் ஜீ. சாமிநாத அய்யர் ...	0	4	0
ஷையூர் வெங்கடம்மாள் கி. மு. தாயார் ...	0	4	0
ஷையூர் வாச்சர் ராமி நாயுடு	0	4	0
ஷையூர் ப. கோ. மெம்பர் சின்னு என்கிற பெருமாளுக் கவுண்டர்	0	4	0
ஷையூர் லேட் வி. எம். மூக்காச்கவுண்டர் ...	0	4	0
வெங்கிடசமுத்திரம் லேட் வி.எம் வெங்கியாக்கவுண்டர்	0	4	0
மருதிப்பட்டி ப. கோ. மெ கு. எ. லச்சுமக்கவுண்டர்	0	4	0
கூடலூர் அழகர் பெருமாள் கோவில் அர்ச்சக எம். வி. துரைசாமி அய்யங்கார்	0	8	0
ஊத்தங்கரை ராமஸ்வாமி அய்யங்கார்	0	4	0
அத்திப்பாடி பஞ்சாயத்து ஸ்கூல் உபாத்தியாயர் எம். வி ரங்கசாமி அய்யங்கார்	0	8	0
சூரப்பட்டி சேஷையங்கார் பெண்ஜாதி லக்ஷ்மி அம்மாள்	0	4	0
M. வேட்ரப்பட்டி சே.ம. சென்னகேசவையங்கார் தற்கால மானேஜர் மொரப்பூர் கோவில் அர்ச்சகர்	0	4	0
மேற்படி கோவில் மேற்படி தொழில் சுப்ராய அய்யங்கார் குமாரர் சென்னகேசவையங்கார்	0	4	0

வெளாம்பட்டி கி. மு. குப்பாக்கவுண்டர்	....	0	4	0
மேற்படியூர் கர்னம் ராமஸ்வாமி அய்யங்கார்	...	0	4	0
மேற்படியூர் குப்புசாமி தாசர்	....	0	4	0
மேற்படியூர் லேட் கர்னம் இப்போது மொரப்பூர் கர்னமாயிருக்கும் சுப்ரமண்ய ஆசாரி		0	4	0
மருதிப்பட்டி மஜரா மேட்டூர் கிராமம் பாரஸ்டு பஞ்சாயத்து மெம்பர் மாரப்பக்கவுண்டர்	....	0	8	0
மேற்படியூர் நாட்டு மாரக்கவுண்டர்	....	0	4	0
தாமலேரிப்பட்டி வெங்கிடசாமிசெட்டி	....	0	2	0
தாம்பரகோவியம்பட்டி ப. கோ. மெம்பர் சின்னப்ப கவுண்டர் ...	...	0	8	0
மத்தியம்பட்டி கொளந்தைகவுண்டர்	...	0	8	0
கல்லாவி S. கிருஷ்ணசாமி அய்யங்கார்	....	0	4	0
மருதிப்பட்டி ஸ்ரீனிவாசையங்கார்	....	2	4	0

மருதிப்பட்டி சென்னகேசவரஸ்வாமி கோவில் தற்கால மானேஜர்களின் பெயர்.

---

1 கி. மு. கிருஷ்ணசாமி அய்யங்கார், மருதிப்பட்டி
2 ஸ்ரீனிவாசையங்கார், ஷையூர்
3 எம். வி. துரைசாமி அய்யங்கார், கூடலூர்
4 ஷை கோபாலகிருஷ்ணய்யங்கார், கொரட்டி
5 ஷை ஊத்தங்கரை எம். வி. ராமஸ்வாமி அய்யங்கார்
6 அத்திப்பாடி பஞ்சாயத்து ஸ்கூல் உபாத்தியாயர் எம். ரங்கசாமி அய்யங்கார்
7 S. கிருஷ்ணசாமி அய்யங்கார், கல்லாவி
8 லக்ஷ்மண அய்யங்கார், மேற்படியூர்
9 சூளகரை கிருஷ்ணமூர்த்தி அய்யங்கார்
10 தத்தாத்ரி அய்யங்கார், மேற்படியூர்
11 தென்கரைக்கோட்டை ச. எ. சென்னகேசவையங்கார்
12 சூரியநாராயண அய்யங்கார், மருதிப்பட்டி
13 வெங்கடாச்சாரி, ஒசூர்

மருதிப்பட்டி, 2—12—31

ஸ்ரீனிவாசய்யங்கார்,
அர்ச்சகர்—குத்தகைதார்.

சஞ்சீவி பிரஸ், தர்மபுரி—706-31